விதையை ஏற்கனவே அனுப்பிவிட்டமையால், மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று தெரிவித்தது. எனவே, தமிழக அரசு நெல் விதை எதுவும் மேற்கு வங்க அரசிற்கு அனுப்பிவைக்கவில்லை.

Ground Water

£* 22 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any report has been sent by the Government about the availability of ground water to the State Farms Corporation; and

(*b*) if so, the details thereof?

நில நீர்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நில நீர் கிடைப்பது குறித்து, மாநில பண்ணைக் கழகத்திற்கு அறிக்கை ஏதும் அரசு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) : பேரவை முன்னர் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Oil Seed Research Centres

£* 23 *Q.*—THIRU R. KRISHNASWAMI NAIDU : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the places, where Oil Seed Research Centres are located in Tamil Nadu and the details of oil seeds in which research is made there;

(*b*) the object and scope of this scheme;

(*c*) whether this scheme is implemented without any loss to Government;

(*d*) the places, where the groundnut seed primary stage, secondary stage and tertiary stage farms are functioning; and

---

@ 228–229-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

£ Postponed from the list of questions for 9—8—1972.

(e) the reason for the reluctance of the Co-operatives and others to undertake groundnut seed multiplication units in the tertiary stage?

எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையங்கள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையங்கள் எங்கெங்கு இருக்கின்றன? அங்கு என்னென்ன எண்ணெய் வித்துக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன?

(இ) இந்தத் திட்டத்தின் நோக்கமும் செயல் முறைகளும் யாவை?

(உ) இத்திட்டம் அரசுக்கு நஷ்டமில்லாமல் நடக்கின்றதா?

(எ) நிலக்கடலை விதை 1ஆம் நிலை 2ஆம் நிலை 3ஆம் நிலைப் பண்ணைகள் எங்கெங்கு செயல்படுத்தப்படுகின்றன?

(ஐ) 3ஆம் நிலைப் பண்ணைகளை ஏற்று செயல்படுத்துவதற்கு கூட்டுறவு ஸ்தாபனங்களோ, மற்றவர்களோ முன் வராததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ), (இ), (உ), (எ) & (ஐ): சபை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: எண்ணெய் வித்துக்களை கூட்டுறவு ஸ்தாபனங்கள் வழங்குவதற்குக் காரணம் லாபத்தை எதிர் பார்ப்பது என்று விவர அறிக்கை சொல்லுகிறது. லாப நஷ்டம் அடையத் தேவையில்லை. இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தும் நடைமுறை நிலைமையில் இருக்கின்ற மற்ற சிரமங்களும் வட்டி நஷ்டமும் இல்லாமலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்று நடத்த வகை செய்வது பற்றி அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பற்றி அரசு ஆராயவேண்டிய நிலை இருக்கிறது. பொதுவாக கூட்டுறவு ஸ்தாபனத்திலே சில பொறுப்புக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டிய கட்டாயமான நிலைமையும் இருக்கிறது. ஆகையினாலே இதுபற்றி தகுந்த நேரத்தில் ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 229—230-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.